Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 23, 2023

வியாழக்கிழமை மார்ச் 23, 2023 | ஒளி: 03 கதிர்: 235 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப

# புதிய பாதை திறந்துள்ளது

**பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள்**

**தாய்நாட்டை மீண்டும் உயர்த்தும் சந்தர்ப்பம் என்கிறார் ஜனாதிபதி**

**அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி ஆதரவளிக்கவும் அழைப்பு**



சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய்நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் என்றும் அதன் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) விசேட உரையொன்றை ஆற்றியபோதே

தொடர்ச்சி P2

## ஏறுமுகத்தில் ரூபாய்

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி புதன்கிழமை (22) அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 312 ரூபாய் 61 சதமாகவும் விற்பனை விலை 330 ரூபாய் 16 சதமாகவும் பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை (21) வெளியான நாணய மாற்று விகிதங்களின் படி, டொலரொன்றின் கொள்வனவு விலை 316 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை விலை 334 ரூபாய் 93 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

மக்களாணையை மதிக்கும்

## அரசியல் கட்டமைப்பை உருவாக்க நிபந்தனையற்ற ஒத்துழைப்பு

**சு.க வழங்கும் என்கிறார் மைத்திரி**

**சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த 10 பிரதான நிபந்தனைகளை தாராளமாக நிறைவேற்றலாம்**



பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு, குடும்ப ஆட்சி இல்லாத மக்களாணைக்கு மதிப்பளிக்கும் ஓர் அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்கும் என்று முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முதல் தவணை தொகை பெறும் கடிதத்தை சமர்ப்பிக்கவில்லை

**ஐஎம்எப் ஒத்துழைப்பை பெறுவதை, பொதுஜன பெரமுன அரசாங்கம் ஓர் எதிரியை போல் பார்த்தது. இறுதியில் நாடு வங்குரோத்து அடைந்தது**



சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து முதல் தவணை தொகையை பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் நிதியமைச்சர், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் இந்த இணக்கப்பாட்டு கைச்சாத்து கடிதம், பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஐஎம்எப் நிபந்தனைகளில்

## இனப்பிரச்சினை தீர்வையும் உள்ளடக்குவது அவசியம்

**சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வம் எம்பி கோரிக்கை**

**சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிதி: எங்களுடைய ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தப் பயன்பட வேண்டும்**

இனப்பிரச்சினைக்கான தீர்வும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தக் கோரிக்கையை உள்ளடக்குமாறு கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தமிழகத்தின் புரிதலின்மை வேதனை அளிக்கிறது

**அமைச்சர் டக்ளஸ் ஆதங்கம்**

இந்திய கடற்றொழிலாளர்களின், அத்துமீறி எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறையால் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தமிழக மக்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வருத்தமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பாடசாலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

**இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலைகள் கிடைக்காத மாணவர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கலாம்**

2022ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 க்கு மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகளை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

அதிகபட்சமான வெட்டுப்புள்ளியாக கொழும்பு றோயல் கல்லூரிக்கு 182 புள்ளியும் கொழும்பு விஷாகா வித்தியாலயத்துக்கான வெட்டுப்புள்ளியாக 181 புள்ளியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கோட்டையில் ஒன்று கூடின

தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற சபையை கலைக்கும் திடீர் தீர்மானத்துக்கு அரசாங்கம் தீர்வு வழங்கவில்லை என்று தெரிவித்து, கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் புதன்கிழமை (22) ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒன்று கூடின.

கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் 20ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்தே இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், ஒன்றிணைந்த ஆசிரியர் சேவை சங்கம் ஆகியவை ஒன்று கூடியிருந்தன.

ஆசிரியர் இடமாற்ற சபையை கலைக்கும் தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கல்வி அமைச்சர் அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அமைச்சுக்கு அழைத்திருந்த நிலையில் குறித்த பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

தொடர்ச்சி P2

## ஷாப்டரின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு



பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பிலான நீதவான் விசாரணையை ஏப்ரல் 4ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் டி. என். இளங்கசிங்க, புதன்கிழமை (22) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



## மஹிந்த, பசிலின் பயணத்தடை இனி அமலில் இல்லை

**பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரிய மனுக்கள் மீதான விசாரணை**

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை, இனி அமலில் இல்லை என்பதை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்றம், புதன்கிழமை (22) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

புனர்வாழ்வு முகாமில் நடந்த

## படுகொலை தகவல்கள் வெளியே வரவேண்டும்

2000 ஆம் ஆண்டு புனர்வாழ்வு முகாமில் நடந்த படுகொலைகள் தொடர்பான தகவல்களை வெளிக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார். சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு

தொடர்ச்சி P2

கடற்றொழிலாளர்களின் இன்றைய

## போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல

**கொழுவி விடப் பார்க்கின்றனர் என்கிறார் செல்வம் எம்.பி**



இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு, தமது கடற்றொழிலாளர்கள் இன்று (23) ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்றார்.

தொடர்ச்சி P2

லங்கா ஹொஸ்பிடல்ஸ், டெலிகொம் விவகாரம்

## 14 கேள்விக் கணைகளை தொடுத்தார் சஜித்

**குறித்த நிறுவனங்களின் உரிமம் வெளிநாட்டு நிறுவனங்கள் வசமாதல் என்ற ஆபத்து, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை அரசாங்கத்தால் உறுதிப்படுத்த முடியுமா?**



லங்கா ஹொஸ்பிடல்ஸ், ஸ்ரீ லங்கா டெலிகொம் என்பவற்றின் அரசாங்கத்துக்கு சொந்தமான பங்குகளை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்திடம் 14 கேள்விகளை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ்விசேட கூற்றை முன்வைத்தே குறிப்பிட்ட கேள்விகளை எழுப்பினார்.

தொடர்ச்சி P2

PAGE1 தொடர்ச்சிகள்

# புதிய பாதை திறந்துள்ளது

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் தமக்கு சரியான புரிதல் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தச் சிரமங்கள் தற்காலிகமானவை என்றும், தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

## அரசியல் கட்டமைப்பை உருவாக்க நிபந்தனையற்ற ஒத்துழைப்பு

சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

“பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற யோசனையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, 2021 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் முன்வைத்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் பணிகளை உண்மை நோக்கத்துடன் முன்னெடுத்தார். அதற்காக விசேட குழு ஒன்றை நியமித்தார்.

இவ்வாறான பின்னணியில் போராட்டத்தின் ஊடாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் பணிகளை உண்மை நோக்கத்துடன் முன்னெடுத்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் தீர்மானத்துக்கு சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கிய போதும் ஆளும் கட்சி தான், எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு தடையாக இருந்தது. இறுதியில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. நல்லாட்சி அரசாங்கம் நிதியத்துடன் இணக்கமாக செயற்பட்டது. சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்தோம்.

ஒருசில நிபந்தனைகளை அமல்படுத்தினால் சமூக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்படும் என்பதை சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்தினோம். ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை இரத்துச் செய்தோம். சிறந்த நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள 10 பிரதான நிபந்தனைகளை தாராளமாக நிறைவேற்றலாம். ஏப்ரல் மாதம் நடுப்பகுதிக்குள் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முன்னேற்றகரமான திட்ட அறிக்கையை சமர்ப்பித்தல், ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமவாயங்களுக்கு அமைய ஊழல் ஒழிப்பு சட்டத்தை இயற்றல் உள்ளிட்ட 10 நிபந்தனைகள் பிரதானவையாக காணப்படுகின்றன” என்றார்.

## முதல் தவணை தொகை பெறும் கடிதத்தை சமர்ப்பிக்கவில்லை

சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது;

“நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்ளும் தன்மையில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுங்கள் என்றும் 2020 ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் பல தடவை வலியுறுத்தினோம்.

ஐஎம்எப் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை பொதுஜன பெரமுன அரசாங்கம் ஓர் எதிரியை போல் பார்த்தது. இறுதியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. தாமதமான நிலையிலாவது சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு உள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பொருளாதார பாதிப்பில் இருந்து மீளும் நடவடிக்கைகளை கொண்டு அரசியல் செய்யும் தேவை எமக்கு கிடையாது.

சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பான 154 பக்க அறிக்கை இன்று (நேற்று) காலை கிடைக்கப் பெற்றது. ஆகவே அறிக்கையை முழுமையான பரிசீலனை செய்ய வேண்டும். கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அவதானத்துடன் முன்னெடுக்க வேண்டும். எதிர்வரும் நாள்களில் இவ்விடயம் தொடர்பில் முழுமையான தகவல்களை வெளிப்படுத்துவோம்.

> **“பொருளாதார பாதிப்பில் இருந்து மீளும் நடவடிக்கைகளை கொண்டு அரசியல் செய்யும் தேவை எமக்கு கிடையாது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அவதானத்துடன் முன்னெடுக்க வேண்டும்**

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், 14 ரில்லியன் ரூபாய் தேசிய கடன் உள்ளது. மறுபுறம் வங்கி நிதியியல் கட்டமைப்பு தொடர்பில் தெளிவான நிலைப்பாடு குறிப்பிடப்படவில்லை.

முதல் தவணை தொகையை பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் நிதியமைச்சர், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த இணக்கப்பாட்டு கைச்சாத்து கடிதம் பாராளுமன்ற த்துக்கு சமர்ப்பிக்கப்ப டவில்லை” என்றார்.

## ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கோட்டையில் ஒன்று கூடின

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய பாடசாலைகளின் அனைத்து வருடாந்த மற்றும் 10 வருட ஆசிரியர் இடமாற்றங்களும் ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்புகளின் ஆசிரியர்கள் இடமாற்றம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்தால் விசேட வேண்டுகோள்களை விடுக்கலாம் என்றும் அமைச்சு அறிவித்திருந்தது.

## மஹிந்த, பசிலின் பயணத்தடை இனி அமலில் இல்லை

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரி இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, ஒக்டோபர் 7ஆம் திகதிக்குப் பின்னர் தனது சேவை பெறுநர்களின் பயணக் கட்டுப்பாடு உத்தரவை உயர்நீதிமன்றம் நீடிக்கவில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நவின் மாரப்பன மன்றுக்கு அறிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு இவ்விடயத்தை அறிவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியதற்கு அமைய, உயர்நீதிமன்ற பதிவாளருக்கு மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## ஷாப்டரின் வழக்கு...

இந்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்பதை தீர்மானிக்க ஐவரடங்கிய விசேட வைத்திய சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இது நீண்டகால விசாரணையாக மாறியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதியின் சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன அறிவித்தார்.

இதனடிப்படையில், இந்தச் சம்பவத்தை ஆராயும் நிரந்தர நீதவான் முன்னிலையில் விசாரணையை நடத்துவதற்காக வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 14ஆம் திகதி வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதவான் விசாரணைகளை நடத்தும் நிரந்தர நீதவான் ஆஜராகாத காரணத்தால் பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், மார்ச் 22 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக தடயவியல் நிபுணர்கள் மற்றும் இரு சட்ட வைத்திய அதிகாரிகளைக் கொண்ட ஐவர் அடங்கிய விசாரணைக் குழுவை கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய பெப்ரவரி 27ஆம் திகதி நியமித்திருந்தார்.

## 14 கேள்விக் கணைகளை...

குறித்த நிறுவனங்களின் அரசாங்கத்துக்கு சொந்தமான பங்குகளை விற்பனை செய்வதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல், தேசிய கொள்கை அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அரச பொது நிறுவன சீர்திருத்தப் பிரிவால் முன்மொழியப்பட்டுள்ளதோடு, இதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் பிரகாரம், இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி பின்வரும் விடயங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டு கீழ்வரும் கேள்விகளை எழுப்பினார்.

வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் 49.50% திறைசேரி வைத்திருக்கும் ஸ்ரீ லங்கா டெலிகொம் பங்குகளை விற்க யாரால் முடிவு செய்யப்பட்டது? எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது? ஸ்ரீ லங்கா டெலிகொம் 2012 முதல் 2022 வரை பெற்ற வரிக்குப் பிந்தைய வருடாந்த இலாபத்தை இந்தச் சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா? என்று வினவினார்.

குறித்த 10 ஆண்டுகளில், ஸ்ரீ லங்கா டெலிகொம் அதன் பங்கு உரித்துடைமைக்காக திறைசேரிக்கு ஆண்டுதோறும் எவ்வளவு இலாபத்தொகையாக செலுத்தியுள்ளது? இதுவரை டெலிகொம் நிறுவனத்திடம் இருந்து கிடைத்த வருமானம் இனிமேலும் எவ்வாறு கிடைக்கும் என்பதை இந்த சபைக்கு விளக்குவீர்களா என கேட்டார்.

குறித்த 10 ஆண்டுகளில் ஸ்ரீ லங்கா டெலிகொம் வரியாக எவ்வளவு தொகையினை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ளது?

இந்நாட்டின் இரகசிய தகவல் கட்டமைப்பு உட்பட தரவு அமைப்புகளுடன் தொடர்புடைய பல சொத்துகளைக் கொண்டுள்ள ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதன் காரணமாக குறித்த நிறுவனங்களின் உரிமம் வெளிநாட்டு நிறுவனங்கள் வசமாதல் என்ற ஆபத்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை அரசாங்கத்தால் உறுதிப்படுத்த முடியுமா என்ற கேள்விகளையும் எழுப்பினார்.

அரசாங்கத்தின் சார்பாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் கொண்டுள்ள பங்கு மூலதனத்தில் 51.34% உரிமமுடைய லங்கா ஹொஸ்பிடல்ஸ் பி எல் சி யின் குறித்த பங்குகளை விற்பனை செய்ய முடிவு செய்தது யார்? எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது? லங்கா ஹொஸ்பிடல் 2012 முதல் 2022 வரை பெற்ற வரிக்குப் பிந்தைய வருடாந்த இலாபத்தை இந்தச் சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா?

குறித்த 10 ஆண்டுகளில், லங்கா ஹொஸ்பிடல் அதன் பங்கு உரித்துடைமைக்காக திறைசேரிக்கு ஆண்டுதோறும் எவ்வளவு இலாபத்தொகையாக செலுத்தியுள்ளது? குறித்த 10 ஆண்டுகளில் லங்கா ஹொஸ்பிடல் பி எல் சி வரியாக எவ்வளவு தொகையினை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ளது என்றார்.

## ஏறுமுகத்தில் ரூபாய்

மார்ச் 1ஆம் திகதிமுதல் அதிகரித்து வந்த ரூபாயின் பெறுமதி மார்ச் 10ஆம் திகதி முதல் குறைந்து வந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அங்கிகாரம் கிடைத்த பின்னர் ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அனுமதிக்கான...

கண்டி தர்மராஜ கல்லூரிக்கான வெட்டுப்புள்ளியாக 180 புள்ளியும் கொழும்பு ஆனந்த கல்லூரிக்காக 179 புள்ளியும் கொழும்பு நாலந்த கல்லூரிக்காக 176 புள்ளியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் தகுதிபெற்று இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலைகள் கிடைக்காத அல்லது வேறு நியாயமான காரணங்களுக்காக தமக்கு கிடைத்த பாடசாலையை மாற்ற விரும்பும் மாணவர்கள், அது தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகளை ஒன்லைன் முறைமையிலோ கல்வியமைச்சிடமோ சமர்பிக்க வேண்டுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## தமிழகத்தின் புரிதலின்மை...

இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேகப் உடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு, கொழும்பு, மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று (22) இடம்பெற்றது.

இலங்கையின் கடல் வளத்தினையும், வட பகுதி தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கை கடற்படையினர் மேற்கொள்ளும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக, இந்தியாவில் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துகள் இரு நாடுகளுக்கும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை.

இந்நிலையில், இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோத தொழிலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் இராஜதந்திர அணுகுமுறைகளின் தொடர்ச்சியாக பிரதி உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு இடம்பெற்றதாகவும், இதன்போது இந்திய கடற்றொழிலாளர் விவகாரத்தில் இரு நாடுகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## படுகொலை தகவல்கள்...

தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது;

“புனர்வாழ்வு முகாம் படுகொலை தொடர்பில் 200 கிராமவாசிகள் பொலிஸாரால் கைது என்ற செய்தி 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 அன்று தமிழ் பத்திரிகையொன்றில் வெளியாகியிருந்தது. அந்த முகாமில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான விசாரணைகள் நடைபெற்றதாக காட்டிக்கொண்டாலும், அந்த விசாரணை மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

அந்தப் படுகொலைகள் யாரால் செய்யப்பட்டன என்று கண்டறியப்பட்டதா? இந்தப் படுகொலை தொடர்பில் நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்கியது என்ற தகவல்களை வெளிக்கொணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்” என்று தெரிவித்தார்.

## இனப்பிரச்சினை தீர்வையும்...

அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்ச்சியாக ஏமாற்றும் விடயமாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளில் அதுவும் ஒன்றாக இருக்க வேண்டும்.

மேலும், சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிதி எங்களுடைய ஏழை மக்களின் வாழ்க்கையை வைத்தியசாலை, பாடசாலைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

ஊழல் மோசடிகளை தடுப்பது தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. ஆட்சியாளர்கள் ஊழலை முதன்மையாக கொண்டு செயற்படுவதனாலேயே நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது.

இவ்வாறான ஊழலை யை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல

சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு எமது கடற்றொழிலாளர்கள் நாளைய தினம் (இன்று) ஆர்ப்பாட்டமொன்றை செய்யவுள்ளனர்.

எமது மக்களையும், இந்திய மக்களையும் கொழுவிவிடும் பேச்சாகவே இதனை பார்க்கின்றோம். ஏனென்றால் ஏற்கெனவே இந்திய ரோலர் படகுகளின் வருகையால் பல்வேறு இன்னல்களை இவர்கள் சந்தித்திருக்கும் நிலையில், வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறியது நடைமுறையில் சாத்தியமில்லை என்றாலும் எமது மீனவர்கள் இதில் அச்சம் கொண்டுள்ளனர்.

இதனால் இவ்வாறான வேலைகளை யாரும் பார்க்க வேண்டாம் என்று கேட்கின்றோம். இந்தியாவுடனான நெருக்கத்தில் இடைவெளியை ஏற்படுத்துவதற்காகவே இதனை கூறுகின்றனர். எமது மீனவர்கள் நடத்தும் போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்பதனையும் கூறிக்கொள்கின்றோம்” என்றார்.



# இருபுறமும் திருடர்கள் உள்ளனர்



"பாராளுமன்றத்தில் ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு என இருபுறமும் திருடர்கள் உள்ளனர். ஆகவே திருடர், திருடர் என விமர்சித்துக் கொள்வது பயனற்றது. மோசடி செய்யப்பட்ட நிதி நாட்டில் இல்லை. ஆகவே, நாட்டின் எதிர்காலத்தையும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்" என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) நடைபெற்ற ஜனாதிபதியின் விசேட உரையை தொடர்ந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளதையிட்டு, மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாடு வங்குரோத்து நிலைய அடைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடின முயற்சிக்கு அமைய, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளதையிட்டு எதிர்க்கட்சி என்ற ரீதியில் மகிழ்ச்சியடைய வேண்டும்.

தற்போதைய நிலையில் முழுமையான ஒத்துழைப்பை நான் வழங்குவேன். ஏனெனில் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. எந்நாளும் திருடன், திருடன் என விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. ஆனால், எந்தத் திருடனும் பிடிபடவில்லை; பிடிக்கப்பட்ட திருடனும் இல்லை. பாராளுமன்றத்தில் இரு புறமும் திருடர்கள் இருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் 30 வருடகால அனுபவத்தை கொண்டவர் என்ற அடிப்படையில் குறிப்பிடுகிறேன், ஆளும் மற்றும் எதிர்த்தரப்பில் திருடர்கள் உள்ளார்கள். பிடிப்பட்டால் அனைவரும் நெருக்கடிக்குள்ளாகுவார்கள் என்பதால் திருடர்கள் ஒருபோதும் அகப்படமாட்டர்கள். மோசடி செய்யப்பட்ட நிதி நாட்டில் இல்லை.

ஜனாதிபதியால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியாது என ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டார்கள். ஆனால், தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. ஆகவே இதன் பயனை முழுமையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலத்தையும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# இலாபமடையும் அரச நிறுவனங்களை விற்பது ஏன்?

## ஜனாதிபதிடம் விமல் கேள்வி



"நட்டமடையும் அரச நிறுவனங்களை விற்பதாகக் கூறிக்கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களையும் விற்பது ஏன்" என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதிடம் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை சமர்ப்பித்து ஜனாதிபதி உரையாற்றியதைத் தொடர்ந்து, ஒழுங்கு பிரச்சினையொன்றை எழுப்பி கேள்வியெழுப்பிய போதே வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து வீரவன்ச மேலும் தெரிவிக்கையில், "நட்டமடையும் அரச நிறுவனங்களை விற்பதாகவே முன்னர் கூறப்பட்டது. ஆனால், இலாபம் அடையும் நிறுவனங்களை ஏன் விற்க வேண்டும்? இவ்வாறான நிறுவனங்களை விற்கும் போது, அதனை வெளிநாட்டவர் வாங்கினால் அவர்கள் இங்குள்ள பணத்தை டொலராக மாற்றியே கொண்டு செல்வர். அப்போது இங்கு அந்நியசெலாவணி அழுத்தம் அதிகரிக்குமா, குறையுமா? இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்டாவது இதற்கு பதிலளியுங்கள்" என்றார்.

# "ஒத்துழைப்பு கிடைத்ததில்லை"



"சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் தொடர்பில் ஒருபோதும் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பு கிடைத்ததில்லை" என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியதன் பின்னர், அதைப் பாராட்டி,குமார வெல்கம எம்பி, சபையில் முன்வைத்த கூற்றுகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஹரீன் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளவுள்ள கடன் விவகாரம் தொடர்பில், ஒருபோதும் எதிர்க்கட்சி தனது ஒத்துழைப்பை வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொண்டாலும் அதனை அரசாங்கத்தால் மீளச் செலுத்த முடியாது என்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் மேடைகளில் பேசி வந்தனர்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் முன்வரிசையில் உள்ளவர்கள் சிலரும் கூட, சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் கடன் வழங்கப் போவதில்லை என்றும் தெரிவித்து வந்தனர். ஆனால், தற்போது அந்த நிதியத்தின் கடன் எமக்குக் கிடைத்துள்ளது.

இப்போது பாராளுமன்றத்தில் குமார வெல்கம போன்றவர்கள், அதற்காக ஜனாதிபதியைப் பாராட்டும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

# "IMF இன் ஒத்துழைப்பு ஆரம்பப் படிக்கல்லே"



"சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு, பொருளாதார மீட்சிக்கு ஆரம்பக்கட்ட படிக்கல்லாக உள்ளது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு சிறந்த தீர்மானத்தை பாராளுமன்றத்தின் ஊடாக எடுக்க, எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது; பாரிய போராட்டத்துக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வரிச்சலுகை வழங்கியமை, உரம் தடை செய்தமை ஆகிய காரணிகளால் பொருளாதார பாதிப்பு குறுகிய காலத்திற்குள் தீவிரமடைந்துள்ளது. தற்போது அரசாங்கம் என்ற ரீதியில் ஒன்றிணைந்துள்ள காரணத்தால் உண்மையை மறைக்க முடியாது.

கடந்த காலத்தை பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்படும். ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தூரநோக்கு கொள்கையுடன் செயற்பட வேண்டும். சர்வதேச நாணய ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு ஆரம்பக்கட்ட படிக்கல்லாக அமையும்.

இலங்கை 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு உள்ளது. பொருளாதார பாதிப்பு ஏற்படும் அறிகுறிகள் காணப்பட்ட பின்னணியில் தான், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. 2020ஆம் ஆண்டு பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததன் பின்னர், நாடு வங்குரோத்து என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தான், சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான நிபந்தனை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறு நிபந்தனை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதற்காக, அறிக்கை பாராளுமன்றத்திற்கு முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

# 33,000 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள்



26,000 பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி நாடளாவிய ரீதியில், 141 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதுடன் இப்பரீட்சையில் 53,000 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இரு முறைமைகளுக்கு இணங்க எதிர்வரும் மே மாதத்தில் 33,000 பேருக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில், வசந்த யாப்பா பண்டார எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "7,500 கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தால் தேசிய கல்வி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அங்கு மீளாய்வு மேற்கொண்டதன் பின்னர், இம்மாத இறுதிக்குள் பெறுபேறுகள் உத்தியோகபூர்மாக வெளியிடப்படும். அவர்கள் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். அதன் மூலம் மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரும்.

அதற்கு மேலதிகமாக, 26,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை அவர்களுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 53,000 பட்டதாரிகள் அந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் 141 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. அதன் பெறுபேறுகளை விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதையடுத்து, நாம் பெறுபேறுகளை மாகாணங்களுக்கு அனுப்பவுள்ளோம். அங்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு மாகாண அடிப்படையில் அந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த இரு முறைமையின் கீழ் 33,000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மே மாத நடுப்பகுதியில் இவர்களுக்கு நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நாம் கண்காணிப்பு ஒன்றை மேற்கொண்டு வருகின்றோம். விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு உயர்தரத்துக்கான ஆசிரியர்களை நியமித்து, பின்னர், தனியாக மாகாண ரீதியில் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் அண்மையில் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியான பட்டதாரிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என்றார்.

# ஆளும் கட்சியை ஆதரித்த எதிர்க்கட்சி

## மகிழ்ச்சியில் டிலான்



'நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நேற்று (22) பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

இவருடைய பெயரை பாராளுமன்ற உறுப்பினர் மாயாதுன்ன சிந்தக அமல் முன்மொழிந்ததுடன், கெவிந்து குமாரதுங்க வழிமொழிந்தார்.

இந்நிலையில், "ஆளும் கட்சி உறுப்பினரால் தனது பெயர் முன்மொழியப்பட்டு, எதிர்க்கட்சி உறுப்பினரால் வழிமொழியப்பட்டு, இக்குழுவின் தலைவராகத் தான் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சி அளிப்பதாக டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இழப்பீடுகள் பற்றிய அலுவலகம், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தத் திணைக்களம், அரசாங்க மொழிகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களைக் குழு முன்னிலையில் கலந்துரையாடல்களுக்கு அழைக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குழு உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, குலசிங்கம் திலீபன், மயாதுன்ன சிந்தக அமல், கெவிந்து குமாரதுங்க, திருமதி ரஜிகா விக்கிரமசிங்க, எம்.ஏ சுமந்திரன், இசுரு தொடங்கொட ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

JB | CREDIT
SINCE 1944
MARGIN LENDING

**வணிக செயல்பாடுகளை நிறுத்துதல்**
**ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடட்**
**உச்சஎல்லை கடன் வழங்குனர்**

2023 மார்ச் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட் உச்சஎல்லை கடன் வழங்குனர் என்ற வகையில் தனது வணிக செயல்பாடுகளை நிறுத்த தீர்மானித்துள்ளது. தற்போது கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட்டின் அனைத்து வாடிக்கையாளர்களையும் தொடர்பு கொண்டு அவர்களுக்கான மாற்று கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு இந்த அறிவித்தல் கிடைத்திராவிட்டால் அல்லது வேறு தெளிவுபடுத்தல்கள், விபரங்கள் அல்லது முறைப்பாடுகள் இருப்பின் தயவுசெய்து மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னராக 011 2490900 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாக தங்களின்
முதலீட்டு ஆலோசகருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடட்,**
**150, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14.**

இலங்கை பௌத்த நாடு என வெளிப்படுத்துவதற்கே

# நெடுந்தீவு வெடியரசன் கோட்டையில் கடற்படை பதாகை அமைப்பு

எஸ். நிதர்ஷன்

இலங்கை முழுவதும் சிங்கள பௌத்த நாடு என்பதனை சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்துவதன் நிகழ்ச்சி நிரலே நெடுந்தீவு வெடியரசன் கோட்டை தொடர்பான கடற்படையின் பதாகை அமைப்பு என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார். வெடியரசன் கோட்டை பகுதியில் அண்மையில் பௌத்த விகாரை அடையாளபடுத்தல் தொடர்பாக எழுந்த அண்மைய நாள் சர்ச்சைகள் தொடர்பாக நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

சரவணபவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “2007 ஆம் ஆண்டு வெடியரசன் கோட்டை என இது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இங்கு வாழுகின்ற நெடுந்தீவு வாழ் மக்கள் பாரம்பரியமாக இது வெடியரசன் கோட்டை என்றே அடையாளபடுத்தி வருகின்றார்கள். யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர்கள் இது சிங்கள பௌத்தத்துக்கு உரிய என்ற போர்வையில் பௌத்த சிங்கள மயமாக்கல் முயற்சியாக இது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு தமிழ் பௌத்தம் நிலவியதற்கானசான்றுகளை எத்தனையோ அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். நாங்கள் நெடுந்தீவில் இறங்கும் துறைமுகத்தில் இறங்கி வருகை தருகின்ற பொழுது இதன் சரித்திரத்தை வெளிப்படுத்தும் முகமாக சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சிங்கள பௌத்தமாக திரிபுபடுத்தப்பட்டுள்ளது” என்று கூறினார்.

பாற்கேணி காணிகளை கையகப்படுத்த

# வன இலாகா முயலக்கூடாது

எம்.எஸ்.எம் ஹனீபா

ஒலுவில், அஷ்ரப் நகர் பாற்கேணி காணியை உரிய மக்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் நேற்று (22) தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே இதைத் தெரிவித்தார்.

அஷ்ரப் நகர் பாற்கேணி, வன இலாகாவால் கையகப்படுத்தப்பட்டதாக வர்த்தமானப் பத்திரிகை வெளிவரவில்லை. அஷ்ரப் நகர் பாற்கேணி காணிகள்,



வன இலாகாவால் கையகப்படுத்தப்பட்டமை தொடர்பாக, வன இலாகா அதிகாரியிடம் அதன் விவரங்களை கேட்டறிந்ததுடன், உடனடியாக அந்தக் காணிகளை உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்துள்ளார்.

அத்தோடு, இது தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன், இப்பிரதேசம் காடுகள் இல்லை; அது மக்களால் பயன்படுத்தக் கூடிய இடம் என்பதையும் உரிய ஆவணங்களுடன் தெளிவுபடுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். அரசாங்க அதிபரால் பாற்கேணி காணிகளின் பயன்பாடு, இராணுவத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதும் அக்காணிகளை விட்டு இராணுவம், விலகிக்கொண்ட சந்தர்ப்பத்தில், அந்தக் காணிகளை கையகப்படுத்த, வன இலாகாவினர் முயன்று வருவது கண்டிக்கத்தக்க விடயமாகும் என்றார்.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துக்கு

## ஆளணி வளம் இல்லை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய ஆளணி வளம் இன்மையால், பெரும் கஸ்ரங்களை எதிர் கொள்வதாக, மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு ஏழு வெளிக்கள அலுவலர்கள் தேவையான நிலையில், ஒருவர் மாத்திரமே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம், அண்மை நாள்களாக கால்நடைகளுக்கு ஏற்பட்ட பெரியம்மை என்ற வைரஸ் தொற்று நோயின் தாக்கம் குறைவடைந்து வருவதாகவும் அடுத்த சில வாரங்களில் இது பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கான சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரச உத்தியோகத்தர்களுக்கு அமைக்கப்பட்ட

## வீடுத்திட்டம் சமூக சீர்கேடுகளின் மையம்

மு. தமிழ்ச்செல்வன்

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் பனிக்கன்குளம் கிராமத்தில், அரச உத்தியோகத்தர்களுக்கு 2012இல் 54 காணித்துண்டுகள் வழங்கப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் கடனும் வழங்கப்பட்டு அமைக்கப்பட்ட வீடுகளில் எவரும் குடியேறாத நிலையில், பாழடைந்து காணப்படுவதோடு, சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2012ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு ஏ9 பிரதான வீதியில், காணித் துண்டுகள் வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டன. ஆனால், அன்று தொடக்கம் இன்றுவரை குறித்த வீடுகளில் பல முழுமையாக அமைக்கப்படாதுள்ள நிலையில், சில வீடுகள் முழுமையாக புனரமைக்கப்பட்ட போதும் அதில் எவரும் குடியேறவில்லை.

இதனால், குறித்த வீடுகள் அனைத்தும் பாழடைந்து காணப்படுவதோடு வீட்டுக்குள் பெரியளவவில் புற்றுகள் வளர்ந்தும் காணப்படுகின்றன. அத்தோடு மிக அதிகளவான சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, இத்தகைய சமூகசீர்கேடுகளுக்கு வசதியாக அமைத்துக்கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் போன்றே, இங்கு இடம்பெறும் செயற்பாடுகள் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகம் என்பன உரிய கவனம் செலுத்தி, இதுவரை வீடுத்திட்ட உதவியைப் பெறாதுள்ள வறிய குடும்பங்களுக்கு குறித்த வீடுகளை மாற்றம் செய்ய முன்வரவேண்டும் எனவும் பொது மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## விஷமிகளால் படகுகளுக்கு தீ வைப்பு

செந்தூரன் பிரதீபன்

நாகர்கோயில் பகுதியில் கடற்கரை ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 படகுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இப்படகுகள் ஆரம்பத்தில் கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக குறித்த படகுகள் தொழிலில் ஈடுபடாத காரணத்தால் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டதாக



பொலிஸார் தெரிவித்தனர்.

படகுகள் தீக்கிரையாக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அன்ரனி அருள்ராஜ் என்பவருக்கு சொந்தமான பத்து படகுகளே இவ்வாறு விஷமிகளால் தீமூட்டி சொத்து அழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது

## 30 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணம் திருட்டு

செந்தூரன் பிரதீபன்

கீரிமலை நகுலேஸ்வர ஆலய குருக்களின் வீட்டிலிருந்து 30 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணம் திருட்டுப் போய் உள்ளதாக காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மருத்துவ சிகிச்சை ஒன்றுக்காக குருக்கள் கொழும்புக்குச் சென்ற நிலையில் இந்த கைவரிசை இடம்பெற்றுள்ளது. வீட்டின் கூரையினை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள், மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆலய பணமான 30 இலட்சம் ரூபாய்க்கும் அதிக தொகையை எடுத்துச் சென்றுள்ளனர். குருக்கள் கொழும்பிலிருந்து வந்த பொழுது கூரை உடைக்கப்பட்டிருந்தமையை கண்ணுற்றுள்ளார். இதன் பின்னரே வீட்டில் பணம் திருடப்பட்டமை தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை குற்றத் தடுப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்

## வீசப்பட்ட நிலையில் 3 மாத சிசுவின் சடலம் மீட்பு

செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 22ஆம் இலக்க மேல்மாடி விடுதியில் இருந்து கீழே வீசப்பட்ட சிசுவின் சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர் குழாய் ஒன்று உடைந்த நிலையில் அதனூடாக சிசுவின் சடலம் கீழே விழுந்துள்ளது. சட்டவிரோதமான முறையில் கருத்தரித்த ஒருவர் இதனை பிரசவித்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட சிசு மூன்று மாத வளர்ச்சிக் கொண்டது என கண்டறியப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி

எஸ். நிதர்ஷன்

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தால் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபாய் விசேட நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேஇத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் என்று தெரியவருகிறது.

இந்திய அரசாங்கத்தின் இத்தீர்மானம் குறித்து இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்படும் ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஓராண்டு காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். நான்கு இளநிலை மாணவர்களுக்கு ஒரு பட்டப்பின் படிப்பு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.



## கணிதபாட கல்வியாளர்களுக்கு கௌரவம்

வி.ரி சகாதேவராஜா

கல்முனை வலய கல்வி பணிமனையில் கணித பாட உதவி கல்வி பணிப்பாளராக பணியாற்றிய சீனித்தம்பி இலங்கநாதன், கணித பாட ஆசிரிய ஆலோசகராக பணியாற்றிய திருநாவுக்கரசு கிருனிவாசன் ஆகியோருக்கு, வலய கணிதபாட ஆசிரியர்கள் கௌரவம் அளித்துள்ளார்கள்.

இப்பணிநயப்பு கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் (21) காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது. கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம் எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவத்தை வழங்கினார். கூடவே பிரதி கல்வி பணிப்பாளர்களான ஜாபீர் வரணியா ஆகியோர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



அம்பாரையில்

## பொலிஸ் வீரர் தினம்

பாறுக் ஷிஹான்

அம்பாரை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (21) 159 வருட பொலிஸ் வீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில், அம்பாரை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம். டி ஜெயந்த ரட்நாயக்க கலந்து கொண்டு பொலிஸ் கொடியை ஏற்றி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டார். தொடர்ந்து உயிரிழந்த அத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், அம்பாறை



மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்(1) எஜ். பி.எச் செனவிரத்தன, அம்பாறை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அசேல ஹெரத், உயிர் நீத்த பொலிஸ் வீரர்களின் உறவினர்கள், அங்கவீனமுற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மொறவெவ பிரதேச சபை உறுப்பினருக்கு வாள்வெட்டு

எப். முபாரக்

திருகோணமலை, மொறவெவ பிரதேச சபை உறுப்பினர் வாள்வெட்டு தாக்குதலால் படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் செவ்வாய்கிழமை (21) மாலை இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபை உறுப்பினரைத் தாக்கிய சந்தேகநபர், ஓட்டோவில் வந்த நிலையில், தாக்குதலை நடத்திவிட்டு, ஓட்டோவையை விட்டுவிட்டு தப்பியோடி உள்ளதாகவும் தெரியவருகின்றது. குறித்த சம்பவத்தில் மொரவெவ, நாமல்வத்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே காயமடைந்துள்ளார். அரசியல் கூட்டம் ஒன்றிறுக்கு சென்றுவிட்டு, வீடு திரும்பி கொண்டிருந்த வேளையில், ஓட்டோவில் வருகை தந்த சந்தேகநபர் வாளால் வெட்டியதாக ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

## பாராட்டு விழா

விரி சகாதேவராஜா

காரைதீவு கோட்டத்தில் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள காரைதீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில், இம்முறை புலமைப் பரிசில் சித்தி பெற்ற ஒரேயொரு மாணவனான மகேந்திரன் ரனுஸ்ரிகன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் இடம்பெற்ற இந்தவிழா, விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி தேவகௌசல்யா குலேந்திரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

சாதனையாளர்கள் பாராட்டு விழாவில், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்




,கல்முனை வலய கல்வி பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தகுமார், கோட்டக் கல்வி பணிப்பாளர் ஜே. டேவிட் ,உதவி கல்வி பணிப்பாளர் வீ.ரி சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான மா. லக்குணம், த. சிவநாதன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள். மாணவி ஜெயசிறில் லினோஜாவின் வரவேற்பு நடனம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மாகாண விவசாய திணைக்களத்துக்கு

## புதிய பணிப்பாளர் நியமனம்

ஹஸ்பர்

கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக எம்.எஸ்.ஏ காலிஸ் நியமிக்கப்பட்டார். இவர் முன்னர் அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளராக கடமையாற்றினார். இதற்கான நியமனம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ் ரத்நாயக்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி முத்துபண்டா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



## வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு

அ. அச்சுதன்

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை நாளை வியாழக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்தீபன் கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டின் ‘நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், கௌரவ விருந்தினராக மூத்த கவிஞர் அம். கௌரிதாசன், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச. திருச்செந்தூரன், கவிஞர் க. யோகானந்தம், தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ‘சைப்பிரஸ்’ வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்?

■ எஸ். கே. குமார்

150 வருடங்களுக்கு மேலாக பழைமை வாய்ந்த நுவரெலியா நகரின் அழகுக்கு பெருமை தேடி கொடுக்கும் ‘சைப்ரஸ்’ மரங்கள் விறகுக்காக வெட்டப்படுகின்றன. இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பது எவருக்கும் தெரியாமல் உள்ளது.

இது தொடர்பில், நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் மேயரும் நுவரெலியா சுற்றாடல் பாதுகாப்பு குழு தலைவருமான மஹிந்த தொடபேகமகேயும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், நுவரெலியாவில் 150 வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட மரங்கள், கடந்த பல வாரங்களாக வெட்டப்படுகின்றன. இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பது தெரியாமல் உள்ளது.


நுவரெலியாவில் உள்ள பாரிய ‘சைப்ரஸ்’ மரங்களின் கிளைகளை வெட்டுவதாக கூறி மரங்கள் மொட்டையாக வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதால் நுவரெலியாவின் இயற்கை அழகிற்கு பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன்றது. அத்தோடு மரங்கள் வெட்டப்படுவதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு காலநிலையிலும் மாற்றங்கள் ஏற்படும் அபாயமும் உண்டாகும்.

நுவரெலியா நகரிலுள்ள ‘சைப்ரஸ்’ மரங்களை விறகுக்காக வெட்ட அனுமதித்த பலசாலி யார்? கிளைகளை வெட்டுகிறோம் என்ற போர்வையில் பல வாரங்களாக மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் தர்மபால சுற்று வட்டாரத்துக்கு அருகிலுள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. அந்த இடம் ஒரு தனியார் ஹோட்டல் உரிமையாளரின் வாகன தரிப்பிடமாக தற்பொழுது காட்சியளிக்கின்றது. நுவரெலியா நகரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் இரு பக்கங்களிலுள்ள விலையுயர்ந்த சைப்ரஸ் மரங்களும் காரணமின்றி வெட்டப்படுகின்றன.

நுவரெலியா மாநகர சபையில் நகரை அழகு படுத்துவதற்கான ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்த கமிட்டியில் நுவரெலியா நகரிலுள்ள சகல அரச திணைக்களத்திலுள்ள உயர் அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

அந்தக் குழுவிலும் அனுமதி பெறாமல் இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதால் நுவரெலியா நகரத்துக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே நகரிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள்



நடவடிக்கை எடுக்க வேண்டும் என மஹிந்த தொடம்பேகமகே மேலும் தெரிவித்தார்.

# வர்த்தகரின் மகன் கடத்தி விடுவிப்பு

■ ஷேன் செனவிரத்ன



புடவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவருடன் ஏற்பட்ட வர்த்தகம் தொடர்பிலான பிரச்சினை காரணமாக, அவருடைய 17 வயதான மகன், கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது.

கண்டி, ஹந்தான பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மேற்படி புடவை வர்த்தகர், சுமார் 12 இலட்சம் ரூபாய் கடன்பட்டுள்ளார். கடன் கொடுத்தவர்கள் அக்கடனை தொடர்ச்சியாக கேட்டு தொந்தரவு செய்து கொண்டிருந்துள்ளனர்.

கடன் தொகையை மீள வழங்குவதற்கு அந்த வர்த்தகர் பின்னடித்தே வந்துள்ளார். இந்நிலையிலேயே அவரது மகன் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை வீதியிலுள்ள தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோதே, வானொன்றில் வந்த இனந்தெரியாத மூவர், அந்த மாணவனை, பலவந்தமாக வானுக்குள் ஏற்றிக் கொண்டு கடுகண்ணாவை பிரதேசத்துக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் மாணவனின் தந்தையான வர்த்தகருக்கு அழைப்பை எடுத்து, கடனை கொடுக்கும் வரையிலும் மகனை விடுவிக்க மாட்டோம் என எச்சரித்துள்ளனர்.


இதனைக் கேள்வியுற்ற மகனின் தாய், கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொலிஸ் பரிசோதகர், அழைப்பை ஏற்படுத்தியவரின் இலக்கத்துக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்தி, தற்போது இருக்கும் இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் மாணவனுடன் சரணடையுமாறு பணித்துள்ளார்.

அதன் பின்னர், மாணவனை மட்டும் கட்டுகஸ்தோட்டையில் வைத்து பஸ்ஸொன்றில் ஏற்றிவிட்டு, சந்தேகநபர்கள் தப்பியோடி தலைமறைவாகிவிட்டனர் என்று அறியமுடிகின்றது.

சந்தேகநபர்கள் பொல்கஹவெலையைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த கண்டி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# விபத்தில் சிறுமி பலி; தாயின் கரு கலைந்தது

■ என். ஆராச்சி





ஹட்டன்- அவிசாவளை வீதியில் கித்துல்கல, இங்கிரியாவத்தை எனுமிடத்தில் திங்கட்கிழமை (20) இடம்பெற்ற விபத்தில் ஐந்து வயதான சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர், கித்துல்கல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று மாலை 3.20 மணியளவில் தாய், தந்தை மற்றும் மேற்படி சிறுமி ஆகியோர் ஓட்டோவில் பயணித்து கொண்டிருந்துள்ளனர். எதிர்த்திசையில் பயணித்த வான் ஓட்டோவுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஓட்டோவில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த சிறுமி, கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அன்றிரவு 7 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் தாய் கர்ப்பிணி என்றும் அவருடைய கருவும் கலைந்துவிட்டதால் அந்தப் பெண்ணின் நிலைமையும் கவலைக்கிடமாக இருப்பதாக அறியமுடிகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவித்த கித்துல்கல பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# 7 நாளுக்கு முன்னரே கைதி மாயம்

■ ஷேன் செனவிரத்ன

ஹெரோய்ன் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர், ஆறுமாத சிறைத்தண்டனையின் கீழ் புனர்வாழ்வளிப்பதற்காக, பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அந்தக் கைதி, செவ்வாய்க்கிழமை (21) தப்பியோடிவிட்டார் என பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர். அவர், இம்மாதம் 28ஆம் திகதிவிடுதலை செய்யப்பட இருந்தவர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வத்தளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 31 வயதான நபரே தப்பியோடியவராவார். திறந்தவெளி சிறைச்சாலையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே இவ்வாறு தப்பியோடியுள்ளார் என்று தெரிவித்த பல்லேகல பொலிஸார், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

# ‘தண்ணீர் தாங்கி’ வீட்டை அகற்றுமாறு பணிப்பு

ஹட்டன் ஹிஜ்ராபுர பிரதேசத்தில் தண்ணீர்த் தாங்கியின் மேல் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள வீட்டை இடித்து அகற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நிறைவேற்றுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஹட்டன் டிக்கோயா நகர சபையின் முன்னாள் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த வீட்டை இடித்து அகற்றுமாறு ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ஹட்டன்- டிக்கோயா நகர சபை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என அப்பகுதி மக்கள் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் வினவியபோதே முன்னாள் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்த சடையன் பாலச்சந்திரன், இந்த வழக்கு தொடர்பாக கடந்த 15ஆம் திகதி நகர சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பில் கலந்துரையாடப்பட்டு, நீதிமன்ற கட்டளையை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்தச் சட்டவிரோத கட்டுமானத்தை இடிக்க நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அமல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மன்றங்களின் 19 ஆவது பதவிக்காலம் நிறைவடைந்து உள்ளமையால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# பயணப்பொதிகளை களவாடும் காட்சி

■ ரஞ்சித் ராஜபக்ஷ





நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் பயணப்பொதிகளை களவாடும் சம்பவம் தொடர்பிலான காட்சியொன்று, சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ள சம்பவம் ஹட்டன் நகரில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வருகை தரும் நுகர்வோரின் பயணப்பொதிகளிலிருந்து பெறுமதியான பொருட்கள் களவாடப்படும் சம்பவம் தொடர்பில் வர்த்தகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நுகர்வோர் செய்த முறைப்பாட்டுக்கமைய, வாகனங்களில் இருந்து பயணப்பொதிகள், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பொதிகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை திருடும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு பொருட்களை திருடுவோர் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு ஹட்டன் பொலிஸார், பொதுமக்களிடமும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பங்குனி உற்சவம்







வட்டவளை, மீனாட்சி தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பங்குனி உற்சவம் அண்மையில் நடைபெற்றது. அதில், காவடிகள் எடுத்து ஆடுவதையும் பக்தர்களையும் காணலாம்.

(இரா. யோகேசன்)



# கடமைகள் பொறுப்பேற்பு

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையின் அதிபராக திருமதி எஸ். மனோகரன் பசறை வலய கல்வி பணிப்பாளர் திருமதி ஸரீனா பேகம் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பெற்றார்.
இதன்போது கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்தி நிர்வாக குழுவினர், முன்னாள் அதிபர் எஸ். ரமேஷ், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

நடராஜா மலர்வேந்தன்

# ஜனநாயகத்தை பின்பற்றி தேர்தலையும் நடத்துங்கள்

## லெட்சுமனார் சஞ்சய் கோரிக்கை

■ நிலமேகம் பிரசாந்த்



ஜனாதிபதியாக பதவியேற்று பல விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தாலும் இன்று அதல பாதாளத்துக்குச் செல்லவிருந்த நாட்டை மீட்டெடுத்து கொடுத்துள்ள பெருமை ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். கட்சி வேறு கொள்கை வேறாகக் காணப்பட்டாலும் மக்கள் சேவகன் என்ற ரீதியில் மக்கள் சார்பாக ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்து சொல்ல வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு போனஸ் ஆசனத்தின் மூலம் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து, பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாகி இருந்தாலும் தன்னால் நாட்டை கட்டியெழுப்ப முடியுமென்ற நம்பிக்கையில் செயற்பட்டார். பின்னோக்கி சென்று கொண்டிருந்த நாட்டை முன்னேற்றமான பாதையில் செல்ல வழியேற்படுத்தி கொடுத்துள்ளார் என்றார்.

இனி வரும் காலங்களிலாவது பொருட்களின் விலைகளை குறைத்து அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டு மக்களை நிம்மதியான வாழ்க்கைக்கு கொண்டு செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும்.

அதே சந்தர்ப்பத்தில் மக்கள் தற்போது தேர்தலையும் கோருகின்றனர். எனவே ஜனநாயகத்தை பின்பற்றி தேர்தலையும் உடனடியாக வைக்க ரணில் முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# செந்திலுக்கு புதிய நியமனம்



சம்பள நிர்ணய சபைக்கு தொழிலாளர்களின் புதிய பிரதிநிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்பள நிர்ணய சபையின் 30ஆவது ஒழுங்குமுறைக்கு அமையாக வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானியின் ஊடாக சபையின் ஆயுட்காலம் 31.12.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதுடன் செந்தில் தொண்டமானும் புதிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஆயிரம் ரூபாய் சம்பளம் போதாதென அரசாங்கத்திடம் இ.தொ.கா முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம், வர்த்தமானி ஊடாக சம்பள நிர்ணய சபை புதிய உறுப்பினராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மரமேறி விழுந்தவர் மரணம்

■ சுமணசிறி குணத்திலக்க

மொனராகலை, பல்கும்புர பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தை, தென்னை மரத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற இந்தசி சம்பவத்தில் 62 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

வீட்டுத்தோட்டத்தில் உள்ள தென்னை மரத்தில் ஏறி, தேங்காய்களை பறித்துக்கொண்டிருந்த போதே, கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

# கைதிகளையும் மனிதர்களாக நடத்துவதற்கு கற்றுக்கொள்ளுங்கள்

சில திணைக்கங்கள், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்களுக்குச் சென்றால், ஏன் சென்றோமெனச் சிந்திக்கும் வகையில் அலைக்கழிப்பர்.

இன்னும் சில நிறுவனங்களுக்குச் சென்றால், இவ்வளவு சீக்கிரமாக வேலைகளை முடித்துக் கொடுத்துவிட்டார்களா என, மூக்கின் மேல் விரலை வைப்பர். அந்தளவுக்கு துரிதமாக செயற்பட்டு, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பார்கள்.

சிறைச்சாலை திணைக்களத்தை பொறுத்தவரையில், அதன் சேவையும் பணியும் மிகவும் கடினமானதாகவே இருக்கும். கைதிகளுடன் பணியாற்றும் அதிகாரிகள், கண்களுக்குள் எண்ணெயை ஊற்றிக்கொண்டு விழிப்பாக இருக்கவேண்டும். இல்லையேல் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு, தப்பியோடிவிடுவர். அவ்வாறு தப்பியோடிய தருணத்தில், சிறைச்சாலை பாதுகாவலர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதிகள் பலியான சம்பவங்கள் ஏராளம்.

இதற்கிடையில், புனர்வாழ்வு அளிப்பதற்காக திறந்தவெளி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட கைதிகள், அதிகாரிகளுக்கு 'கயிறுகொடுத்தும்' விடுவர். எனினும், கடுமையான தேடுதலுக்குப் பின்னர் சிக்கியும் கொள்வர்.

சிறு,சிறு தவறுகளுக்கான தண்டப்பணத்தை செலுத்தமால், பல ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறானவர்களின் கதைகளைக் கேட்டு, நீதித்துறையில் கடுமையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

'100 குற்றவாளிகள் தப்பித்தாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது' என்பதில் நீதித்துறை கவனமாக இருந்தாலும், அதற்கு கீழிருக்கும் நிறுவனங்கள் தொடர்பில், எதிர்காலத்திலேனும் கூடுதலான அவதானத்தை செலுத்தவேண்டும்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக இருக்கும் சுற்றுமதிலில் 'கைதிகளும் மனிதர்கள்' என எழுதப்பட்டிருக்கிறது. எனினும், உள்ளே சென்று வெளியே வருபவரின் கதைகளைக் கேட்டால், மயிர்க்கூச்செறியும்! அந்தளவுக்கு கொடுமைகள் நிறைந்ததாகவே சிறை வாழ்க்கை அமைந்திருக்கும்.

இந்நிலையில்தான், கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கு உறைக்கும் வகையில் கருத்துரைத்துள்ளார். 'கைதிகளும் மனிதர்கள்' என்பது முக்கியமில்லை. சந்தேகநபர்களை மந்தைகள் போன்று, ஒற்றை சங்கிலியில் கட்டி நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டாம் எனக் கூறியிருக்கின்றார்.

மிருகக்கூட்டங்களைப் போல் நீதிமன்றத்திற்கு சந்தேக நபர்களை அழைத்து வந்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டாம் எனவும் எச்சரித்துள்ளார். கைதிகளை மனிதர்களாக நடத்தவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனினும், சிறைச்சாலைகள் திணைக்களத்தில் இருக்கும் மனிதவளம் உள்ளிட்ட ஏனைய வளங்கள் தொடர்பில், கவனத்தில் கொள்ளவேண்டியது நீதித்துறையின் பொறுப்பாகும். ஒருவருக்கு ஒருவர் விரலை நீட்டிவிட்டு, தப்பித்துக்கொள்ளவோ அல்லது பந்தைப் பறிமாற்றம் செய்துவிடவோ முயலக்கூடாது.

சந்தேகநபராகக் கைது செய்யப்படும் போதே, குற்றவாளியெனப் பலரும் முத்திரை குத்திவிடுவர். ஆகையால், நீதவானின் அறிவுரையின் பிரகாரம், கைதிகளையும் மனிதர்களாக நடத்திக்கொள்வதற்கு கற்றுக்கொள்ளவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



### சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி

# ஜனாதிபதி தேர்தலுக்கான ரணிலின் முதலீடு



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கை இனியும் வங்குரோத்து அடைந்த நாடல்ல என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஏழு பில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளவதற்கான அனுமதி, திங்கட்கிழமை (20) கிடைத்திருக்கின்ற நிலையில், ரணில் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளை ரணில், ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டது முதல் மும்முரமாக முன்னெடுத்திருந்தார். குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலை அதிகரிப்பு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்று நாட்டின் பொருளாதார சுமையை மக்கள் மீது சுமத்தும் வேலைகள் நடைபெற்று வந்தன.

அதன் பிரகாரம், கடன்களை திருப்திச் செலுத்தக் கூடிய வல்லமையை இலங்கை கொண்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு, இந்தியாவும் சீனாவும் கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கிய கடன் உதவிகளை, காலம் தாழ்த்தி மீள வசூலித்துக் கொள்வதற்கு இணங்கியமை முக்கிய காரணம்.

இந்தக் காரணங்களால், இலங்கை வங்குரோத்து அடைந்த நாடல்ல; அது, பெற்றுக்கொள்ளும் நிதியுதவிகளை மீளச் செலுத்துவதற்கான வலு, அதனிடம் இன்னும் இருக்கின்றது என்று சர்வதேசம் நம்புகின்றது. அதனால்தான், சர்வதேச நாணய நிதியம், ஏழு பில்லியன் டொலரை வழங்குவதற்கு இணங்கியிருக்கின்றது என்று கொள்ளலாம். அதை நோக்கும் போது, ரணில் குறிப்பிடுவது போல, இலங்கை இனியும் வங்குரோத்து அடைந்த நாடல்ல என்பது தர்க்க ரீதியில் சரிதான்!

ஆனால், இலங்கை சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை கிட்டத்தட்ட 64 பில்லியன் டொலர் என்பது பொருளாதார வல்லுநர்களின் வாதம். இந்தக் கடன் தொகையைடு இலங்கையால் இப்போது இருக்கும் பொருளாதார நிலையில் திருப்பிச் செலுத்துவதற்கு குறைந்தது 50 வருடங்களாவது ஆகும் என்பதும் அவர்களின் கருத்து.

இலங்கையின் நிலத்துக்கு கீழ் அதிசயிக்கத் தக்க வகையில் எரிவாயுவோ, பெற்றோலியப் பொருட்களோ கிடைத்து, அதைக் கொண்டு நிதி வருவாய், எதிர்பார்க்காத அளவுக்கு அதிகரித்தால் அன்றி, 64 பில்லியன் டொலரைச் செலுத்துவது என்பது உண்மையில் நடக்கக் கூடிய காரியமல்ல. அந்த கடன்கள் மீதான வட்டி, நாளுக்கு நாள் அதிகரித்து ஒவ்வோர் ஆண்டும் செலுத்த வேண்டிய கடன் தொகை இன்னும் இன்னும் அதிகரிக்கவே செய்யும். அது, நாட்டு மக்களின் பல தலைமுறைகளின் தலைகளில் வரியாகவும், விலை அதிகரிப்பாகவும் எழுதப்படும்.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல், அதன் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பு, பௌத்த சிங்கள மேலாதிக்கவாத சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டது. அது, நாட்டின் சமூக, கல்வி, பொருளாதாரக் கட்டமைப்பை சிதைத்து வந்தது.

சுதந்திரம் அடைந்த போது, இலங்கையை முன்னுதாரணமாகக் கொண்டு முன்னேற வேண்டும் என்று நினைத்த சிங்கப்பூர் என்ற அனைவராலும் கைவிடப்பட்ட தேசம், இன்றைக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளோடு போட்டி போட்டு பொருளாதார வெற்றியைக் கண்டிக்கின்றது.

ஆனால், இலங்கையோ, படிப்படியாக வீழ்ச்சியடைந்து, 75ஆவது சுதந்திர தினத்தை அடைவதற்கு முன்னதாகவே, 'வங்குரோத்து அடைந்த நாடு' என்ற பெயரைப் பெற்றது. இன்றைக்கு, 'வங்குரோத்து அடைந்த நாடல்ல' என்பதை சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவியைப் பெறுவதற்கான அனுமதி கிடைத்திருப்பதை, ரணில் ஓர் ஆதாரமாக முன்வைத்து, தன்னுடைய ஆட்சிக்கான நற்சான்றிதழை மக்களிடம் கோருகின்றார்.

அதிலும், இன்னும் ஒரு படி மேற்சென்று, அவரது கட்சியான ஐக்கிய தேசிய கட்சியினர், கடனுதவிக்கான அனுமதி கிடைத்ததை வெடி கொளுத்தி ஆர்ப்பரித்துக் கொண்டாடினார்கள். அதைக் காணும் போது, இந்த நாட்டின் ஆட்சியாளர்களினதும் அரசியல் கட்சிகளினதும் சிந்தனை எவ்வளவு சிறிதானது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தொகுதிக் கடனாக 3.3 பில்லியன் டொலர் எதிர்வரும் மாதமளவில் கிடைக்கும் என்று அரசாங்கம் நம்புகின்றது. அது கிடைத்ததும் எரிபொருட்களின் விலை குறைக்கப்படும் என்று அந்தத்துறை அமைச்சர் கூறியிருக்கின்றார்.

அதுபோல, இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்கிக் கொள்ளவும் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். இவையெல்லாம் மக்கள் மீதான அபிமானத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அல்ல!

மாறாக, தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளாகும். தேர்தல் வெற்றிகளைக் குறிவைத்து வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்றுவிட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதை இலங்கையின் ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் செய்து வந்திருக்கிறார்கள்.

அதனால், நாட்டு மக்கள் மீதான பொருளாதார சுமை என்பது பெருமளவு அதிகரித்திருக்கின்றது. கடன்களை கடந்த காலங்களில் எந்தவித பொருளாதார திட்டங்களும் இன்றி வாங்கிக் குவித்தமையும், அதனை ஆட்சியில் இருந்தவர்கள் சுரண்டி, தங்களின் குடும்பங்களை வாழ வைத்துக் கொண்டமையாலும் நாட்டின் நாணயப் பெறுமதி ஒவ்வொரு நாளும் பாரிய வீழ்ச்சியைக் கண்டு வந்திருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது, இலங்கை ரூபாயின் பெறுமதி என்பது, அமெரிக்க டொலரின் பெறுமதியை விட அதிகமாகும். அந்த நிலையில் இருந்து இன்றைக்கு டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி என்பது கிட்டத்தட்ட 400 ரூபாய் என்ற அளவை எட்டியிருக்கின்றது.

ஏழு பில்லியன் டொலர் நாட்டுக்குள் வரப்போகின்றது என்பதைக் காட்டிக் கொண்டு, டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதியை 320க்குள் வைத்துக் கொள்ள அரசாங்கம் முயல்கின்றது. ஆனால், பெறும் கடன்களுக்கான வட்டி உள்ளிட்டவை எல்லாமும் சேர்ந்து கொண்டால், டொலருக்கு எதிரான ரூபாயில் பெறுமதி இந்த ஆண்டின் இறுதிக்குள் 400 ரூபாய் என்ற அளவை எட்டும் என்பது பொருளாதார அறிஞர்களின் கருத்து.

அவ்வாறான நிலை ஏற்பட்டால், நாட்டில் ஏற்கெனவே காணாமல் போய்க்கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கம் என்ற பெரும்பான்மையான மக்கள், வாழ்வதற்கான சிக்கல்களை இன்னும் இன்னும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நாடு, 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடு' என்ற நிலையில் இருந்து, 'வறுமைக் கோட்டுக்கு கீழான நாடு' என்ற நிலையை எட்ட வேண்டியிருக்கும்.

வெளியாரிடம் இருந்து கடன்களைப் பெற்று, அவசரப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணுவதற்குப் பதிலாக, நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுப்பதுதான் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமாக இருக்கின்றது.

எளிய முறையில் சொல்வதென்றால், வறுமையில் வாடும் ஒருவனுக்கு மீனைக் கொடுப்பதைக் காட்டிலும் மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பது என்பது, அவனது பசியை மட்டுமல்ல, அவனது பொருளாதார மீட்சிக்கும் உதவும் என்பது வழக்கு. இந்த நிலை குறித்துதான் மக்களுக்காக சிந்திக்கும் எந்தவொரு ஆட்சியாளரும் செய்ய நினைப்பார்கள். மாறாக, தேர்தலை வெற்றிகொள்வதற்காக, நாட்டை மேலும் மேலும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளி, விளையாடும் வேலைகளைப் பார்க்க மாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடனுதவியைக் கொண்டு, தன்னுடைய தேர்தல் வெற்றிக்கான ஏற்பாடுகளை மாத்திரமே ரணில் மேற்கொள்ள நினைக்கிறார். கடந்த காலங்களில் தன்னையொரு ஜனநாயக விரும்பியாக காட்டிக் கொண்ட அவர், எப்போதோ நடக்க வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த விடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றார். அந்தத் தேர்தல் நடந்தால், தன்னுடைய ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் கனவு எப்போதோ நீர்த்துப் போயிருக்கும் என்பது அவருக்கு தெரியும். அதனால்தான், தேர்தலை நடத்துவதற்கு நிதி அமைச்சு பணத்தினை வழங்காமல் தேர்தல் ஆணைக்குழுவை அலைக்கழிக்கின்றது.

இதன்மூலம், தேர்தல் குறித்த எதிர்பார்ப்புகளை எதிர்க்கட்சிகளிடம் இல்லாமல் செய்துவிட்டு, நேரடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்தும் திட்டத்தை ரணில் முன்னெடுக்கின்றார். அதில், தன்னை முதன்மைப் போட்டியாளராக முன்னிறுத்துவதற்காக, சர்வதேச நாணயத்திடம் பெற்ற கடன் தொகையைக் பயன்படுத்தப் போகின்றார். இது, யாராலும் சகிக்க முடியாத அரசியல் பொறுப்பின்மை. இதன்மூலம், நாடு மீட்கப்பட முடியாத அலைக்கழியும் நிலைக்கு செல்லும். அது, மக்கள் வாழ முடியாத ஒரு சூழலை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்கு வழிகளை உருவாக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

மிகவும் சகிக்க முடியாத விடயம் என்னவெனில், ஒருவரின் உண்மை நிலைமையைப் புரிந்துகொள்ளாது, அவரைக் கண்டபடி அவமானப்படுத்துவது ஆகும்.

எவரது மனதையும் உடைத்தல் ஆகாது. அவ்வாறு, இன்னொருவரின் மனதை நோகடிப்பது மன்னிக்க முடியாத பாவம் ஆகும். ஆணவத்தின் தன்முனைப்பால், அகங்காரத்துடன் வார்த்தைகளை அவிழ்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

பொய்யான விடயங்களையும் எதுவுமே தெரியாமலும் வார்த்தைகளை அழித்துவிடுதால் சிலர் திருப்தி அடைகிறார்கள்; இது இறைவனுக்கு அறவே பிடிக்காது.

தெரியாது தவறுகளைச் செய்தால், மன்னிப்புக் கேட்கலாம். உண்மை நிலைமை எவருக்கும் புரியும். ஆனால், அதுபற்றித் தெரியாதது போல் பலர் நடிப்பதுண்டு.

அன்பைச் செலுத்துவதே ஆனந்தமானது. ஒருவர் இதயத்தை கலங்கவைப்பது கடவுளுக்குப் பிடிக்காது.

உலகத்தில் உயிர்கள் எல்லாமே சந்தோசமாக வாழவே விரும்புகின்றன. உலகில் எந்த உயிர்களையும் புறந்தள்ள எவருக்கும் உரிமையில்லை. அரவணைப்பதே மாண்பு. யாவரையும் நேசிக்கும்போது, இதயம் களிபேருவகையுடன் மிளிரும். இதை உணர்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிபர்கள் நியமிக்கப்படாமையால்

## பாடசாலைகளில் நிர்வாகச் சிக்கல்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகள், நிரந்தர அதிபர்கள் இன்றி காணப்படுகின்றன. இதன் காரணமாக, பல்வேறுபட்ட நிர்வாகச் சிக்கல்கள் பாடசாலைகளில் தோன்றி வருகின்றன.

சில பாடசாலைகளில், பதில் அதிபர்களாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, சமமான தரத்தில் உள்ள ஆசிரியர்கள் குறித்த பதில் அதிபருக்கு கீழ்ப்படியாமல் செயற்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக, வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை முன் கொண்டு செல்ல முடியாத நிலை பாடசாலைகளில் காணப்படுகின்றது.

இத்தகைய நிலைமையை வெளிப்படுத்தும் வகையில், பல இடங்களில் கவனயீர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலயம், துணுக்காய் கல்வி வலயம் என இரண்டு கல்வி வலயங்கள் காணப்படுகின்றன.

இரண்டு கல்வி வலயங்களிலும் முக்கிய பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாததன் காரணமாக, பதில் அதிபர்களே நியமிக்கப்பட்டு உள்ளனர். வலய கல்வி பணிமனைகளுக்கு பல தடவைகள் மனுக்கள் கையளித்தும் அதிபர்கள் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கு வலய கல்வி பணிமனைகள், வடமாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்

# “விமர்சிப்பது எனது பணியல்ல”



## சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்ததை சபைக்கு ஆற்றுப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் பின்னர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்

1) கடந்த காலத் தவறுகள் மீண்டும் நிகழாத வகையில், சட்டதிட்டங்களையும் பின்னணியையும் ஏற்படுத்தி, நாடு கட்டியெழுப்பப்படும்.

2)இலங்கை, பொருளாதார தொங்கு பாலத்தை கடக்க, தான் செயற்பட்டதை இன்று சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

3) தற்போதைய கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பலன் மக்களுக்கு விரைவில் கிடைக்கும்.

4) சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றி.

3) நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்.

4) கடந்த காலத்தை விமர்சிப்பது எனது பணியல்ல; நாட்டை கட்டியெழுப்புவதே எனது பணியாகும்.

5) பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றாமல், ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதே எனது நோக்கம் என்று பலர் குற்றம் சாட்டினர். அவர்களது குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

6) நான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற நேசத்துக்குரிய நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. கடந்த கால அனுபவங்கள் பலவும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளன.

7) சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய்நாட்டை மீண்டும் உயர்த்துவதற்காகக் கிடைத்த சந்தர்ப்பம் ஆகும்.
மேலும் இதன் மூலம் நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது.

8) பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் எனக்கு சரியான புரிதல் உள்ளது. இந்தச் சிரமங்கள் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள்.

9) சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் கீழ், 4 ஆண்டுகளில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 330 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடம் இருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

10 ) IMF நீட்டிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கிகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது.

11) எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கிகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது.

12) இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்கு சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழல் அற்ற சூழல் உருவாக்கப்படும்.

13) இலங்கை அரசாங்கத்தின் வருமானம் தற்போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3% ஆகும். எனவே, 2026 ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

14) 2025 இல், குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும், பரிசு மற்றும் பரம்பரை சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

15) பணவீக்கத்திற்கு ஏற்ப, ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்யும் முறைமையும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் முதன்மை வரவு செலவுத் திட்டக் கையிருப்பு வரம்புக்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும்.

16) எரிபொருளின் விலை நிர்ணயம் செய்வதை, அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும். 2018 விலை சூத்திரத்தின் படியே எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது.

17)எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில் கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மின்சார விலையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

18) பாரியளவில் நட்டத்தை சந்தித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஸ்ரீ லங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும்.

19) பணவீக்க விகிதத்தை மீண்டும் 4% மற்றும் 6%க்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பணவீக்க விகிதத்தை, ஒற்றை இலக்க மதிப்பிற்குக் குறைப்பது எங்கள் இலக்கு.

20) உள்ளூர் நிபுணர்களின் கருத்துகளை உள்வாங்கி, அரசாங்கத்தின் பலவீனங்கள் குறித்து, IMF அறிக்கை ஒன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும்.

21) வலுவான நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும்.

**பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9 ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இலங்கை இருந்தது. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாமல் இருந்தது. வங்குரோத்தடைந்து விட்டதாக உத்தியோகபூர்வமாக இலங்கை அறிவித்திருந்தது.**

**பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்தது. எரிபொருள், எரிவாயு வரிசையில் மக்கள் பலநாள்களாக அவதிப்பட்டனர். பாடசாலைகள் மூடப்பட்டன. ஒருநாளைக்கு 10– 12 மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. சட்டம் – ஒழுங்கு பின்பற்றப்படவில்லை. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, வெளியாட்கள் அதில் குடியேறியிருந்தனர். எதிர்த்தரப்பினரின் வீடுகள் எரிக்கப்பட்டன. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்டனர்.**

**இவ்வாறான பின்னணியில்டு நாட்டை பொறுப்பேற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராதநிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டது.**

**எந்த நிபந்தனையுமின்றி இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை.எனக்கென்று எம்.பிகள் யாரும் இருக்கவில்லை. ஆனால் இவை எதுவும இல்லாவிட்டாலும், எனக்கு ஒரேஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில்எனக்கு பல கடந்த கால அனுபவங்கள் இருந்தன.**

22) நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம், வரிச்சுமையால் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். பணவீக்கத்தால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நேரத்தில் நாம் தற்போது செயல்படுத்தி வரும் கொள்கைகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது.

23) ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறையை திருத்துவது குறித்து ஏற்கெனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும், பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம்.

24) ஜூன் மாத மதிப்பாய்வின் போது இந்த வரி திருத்தங்களை எங்கள் திட்டத்தில் சேர்க்க IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். அதுமட்டுமல்லாமல், காலத்திற்கேற்ப ஏனைய கொள்கை ரீதியிலான திருத்தங்கள் குறித்தும் நாம் ஆலோசிப்போம்.

25) IMF உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தி அடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற்றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் ஆகும். நாங்கள் நமது கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கடனை மறுசீரமைக்க வேண்டும்.
அத்துடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிகளை உருவாக்க வேண்டும்.
உலக சந்தையில் மட்டுமின்றி நமது பிராந்திய சந்தையிலும் நமது பங்கை விஸ்தரிக்க வேண்டும்.

26) நாம் எல்லா நேரத்திலும் கடன் வாங்க முடியாது. கடன் பெறாத தேசமாக மாற நாம் பாடுபட வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இதுவரை நாம் எடுத்துள்ள அனைத்து கடன்களையும் நாம் செலுத்தி முடிக்க வேண்டும். இப்பாதையில் நாம் சரியாகத் தொடர்ந்தால், அந்த நிலையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பாகிஸ்தான்

# குலுங்கியது பாகிஸ்தான்; 11 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் (21) இரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் மலைப்பகுதிகளை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தால் பாகிஸ்தானின் லாகூர், இஸ்லாமாபாத், ராவல் பிண்டி, குவெட்டா, பெஷாவர், கோஹட், லக்கி மார்வட் உள்ளிட்ட பகுதிகள் குலுங்கின.

மேலும் இந்நில நடுக்கத்தால் 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் , 160 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஆப்கானிஸ்தானிலும் சக்திவாய்ந்த



நில நடுக்கமொன்று ஏற்பட்டதாகவும், இது ரிச்டர் அளவுகோளில் 6.6 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இந்நிலநடுக்கத்தின் அதிர்வுகள், புதுடெல்லி, உத்தர பிரதேசத்திலும் உணரப்பட்டுள்ளது. எனினும் அப்பகுதிகளில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

கனடா

## ஆசிரியர்களை கத்தியால் குத்திய சிறுவன்



கனடாவில் பாடசாலையில் 15 வயதான மாணவன், தனது ஆசிரியர்களைக் கத்தியால் கொடூரமாகத் தாக்கிய சம்பவம், கனடாவின் ஹாலிபாக்ஸ் பகுதியில் உள்ள பாடசாலையிலேயே நேற்று முன்தினம் (21) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது, குறித்த மாணவன் திடீரென தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆசிரியரைக் குத்தியுள்ளான். இதனால் அதிர்ச்சியடைந்த மாணவர்கள் கூச்சலிட்டு அங்கும், இங்குமாக ஓட ஆரம்பித்தனர்.

இதனையடுத்து அருகில் உள்ள வகுப்பறையில் இருந்த ஆசிரியர் குறித்த மாணவனைத் தடுக்க முயன்றுள்ளார். அப்போது அவரையும் அந்த மாணவன் கத்தியால் குத்தியுள்ளான். மேலும் இச் சம்பவத்தில் தாக்குதலில் ஈடுபட்ட மாணவனுக்கும் கத்திக்குத்துக் காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் காயமடைந்த 3 பேரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

உக்ரேன்

## செலன்ஸ்கியுடன் கைகோர்த்த கிஷிடா

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த ஒரு வருடமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

எனினும் சீன அரசானது ரஷ்யாவுக்கே தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றது.

அந்தவகையில் சீன ஜனாதிபதி சி ஜின்பிங் அரசுமுறைப் பயணமாக கடந்த 20 ஆம் திகதி ரஷ்யாவுக்குச் சென்றிருந்தமை உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் அரசுமுறை பயணமாக இந்தியாவுக்குச் சென்ற ஜப்பான் பிரதமர்



புமியோ கிஷிடா நேற்று முன் தினம் திடீரென உக்ரேனுக்குச் சென்று, அந்நாட்டு ஜனாதிபதி செலன்ஸ்கியை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை உலக அரங்கில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் படையெடுப்புக்கு பின்னர் உக்ரேனுக்குச் செல்லும் முதல் ஜப்பானிய தலைவர் கிஷிடா என்பதும் குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் 3,000 ரூபாய்



கர்நாடகாவில் காங்கிரஸின் ஆட்சி அமைந்தால் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் 3,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாது , டிப்ளோமா படித்த இளைஞர்களுக்கு 1,500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விரைவில் கர்நாடக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பெலகாவியில் இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது,குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாய், ஒவ்வொரு வீட்டிற்கும் 200 யூனிட் இலவச மின்சாரம், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் இலவச அரிசி உள்ளிட்ட பல வாக்குறுதிகளையும் வெளியிட்டார்.

பெரும்பாவூர்

## பிரபல சின்னத்திரை நடிகை கைது; அதிர்ச்சியில் ரசிகர்கள்

பெரும்பாவூர், எர்ணாகுளம் அருகே சுமார் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருளைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் பிரபல சின்னத்திரை நடிகையொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருவனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த அஞ்சு கிருஷ்ணா என்ற 32 வயதான நடிகையே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் காசர்கோடு பகுதியைச் சேர்ந்த சமீர் என்பவருடன் கடந்த சில நாள்களுக்கு முன்னதாக அடுக்குமாடி குடியிருப்பொன்றில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி இருந்துள்ளார்.

மேலும் தங்களைக் கணவன்-மனைவி என அவர்கள் கூறிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளடைவில் இவர்களின் நடவடிக்கைகள் அக்கம் பக்கத்தினரைச் சந்தேகம் அடையச் செய்துள்ளதாகவும், குறிப்பாக தினமும் இவர்களது வீட்டிற்கு ஏராளமான இளைஞர்,



**“ போதைப்பொருளைக் கைப்பற்றிய பொலிஸார் அஞ்சு கிருஷ்ணாவைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவான சமீரையும் வலைவீசி தேடி வருகின்றனர்**

யுவதிகள் வருகை தருவதாகவும் அயலவர்கள் பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

இதன்பேரில் விரைந்து சென்ற பொலிஸார், அஞ்சு கிருஷ்ணா, சமீர் தங்கியிருந்த வீட்டை சோதனை செய்தனர். இச்சோதனையில் 56 கிராம் எடை கொண்ட போதை பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்போதைப்பொருளைக் கைப்பற்றிய பொலிஸார் அஞ்சு கிருஷ்ணாவைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவான சமீரையும் வலைவீசி தேடி வருகின்றனர்.

கள்ளக் குறிச்சி

## சடலத்துக்கு முன்னால் திருமணம்

தந்தையின் சடலத்திற்கு அருகில் நின்று, இளைஞர் திருமணம் செய்து கொண்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கள்ளக்குறிச்சி அருகே உள்ள பெருவங்கூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜேந்திரனின் மகனான பிரவீன், சொர்ணமால்யா என்ற பெண்ணைக் காதலித்து வந்துள்ளார்.

தனது மகனின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சொர்ணமால்யாவின்



வீட்டிற்குச் சென்று அவரது பெற்றோருடன் பேசி ராஜேந்திரன், திருமணத்துக்கு சம்மதம் பெற்றுவந்துள்ளார்.

இந்நிலையில் ராஜேந்திரனுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்படவே, இரு வீட்டார் சம்மதத்துடன் 27 ஆம் திகதி திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உடல் நலக்குறைவால் ராஜேந்திரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து தனது தந்தையின் கடைசி ஆசையை நிறைவேற்றும் விதமாக தனது உறவினர்களின் சம்மதத்துடன் கனத்த இதயத்தோடு ராஜேந்திரனின் சடலத்துக்கு முன்பாக பிரவீன் தனது காதலியைத் திருமணம் செய்தார்.

### தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியத் தீவுகள்:

# சமநிலையான தொடர்

தென்னாபிரிக்க, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது சமநிலையில் முடிவடைந்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும், பெறப்பட்டிருக்காத நிலையில், இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றிருந்த நிலையில், பொச்செஸ்ஃபோர்மில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியை தென்னாபிரிக்கா வென்றமையைத் தொடர்ந்தே 1-1 என தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

மே. தீவுகள்: 260/10 (48.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரண்டன் கிங் 72 (72), நிக்கலஸ் பூரான் 39 (41), ஜேஸன் ஹோல்டர் 36 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 2/46, பிஜோன் போர்ச்சுன் 2/46, ஜெரால்ட் கொயட்ஸி 2/53, ஏய்டன் மார்க்ரம் 1/30, வெய்ன் பார்னல் 1/30, லுங்கி என்கிடி 1/45)

தென்னாபிரிக்கா: 264/6 (29.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் ஆ.இ 119 (61), மார்கோ ஜன்சன் 43 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/50, அகீல் ஹொஸைன் 2/49, கைல் மேயர்ஸ் 1/12)

போட்டியின் நாயகன்: ஹென்றிச் கிளாசென்

தொடரின் நாயகன்: ஹென்றிச் கிளாசென், ஷே ஹோப்



### மடு மாந்தை கால்பந்தாட்ட லீக்கின்

# முந்தைய நிர்வாக செயற்பாடுகள் குறித்து அதிருப்தி

### இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திடம் கோரிக்கை

எஸ். றொசேரியன் லெம்பேட்

மடு மாந்தை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்குட்பட்ட அனைத்து கழகங்களையும் உள்ளடக்கி அனைத்துக் கழகங்களுக்கும் உரிய வாக்குரிமை வழங்கி இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன பிரதிநிதி முன்னிலையில் சரியான ஒரு நிர்வாகத் தெரிவை நடத்த வேண்டும் என மடு மாந்தை கால்பந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மடு மாந்தை கால்பந்தாட்ட லீக்கின் புதிய தலைவர் எம். டி. அருண்ராஜ், செயலாளர் யே. ஒகஸ்ரின், பொருளாளர் க. மகேந்திரன் ஆகியோர் இணைந்து மன்னாரில் அண்மையில் ஊடக சந்திப்பை மேற்கொண்டனர். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “உண்மையில் விளையாட்டு அமைப்புகள் விளையாட்டு வீரர்களின் திறனை வளர்த்துக் கொள்வதற்கான களத்தை அமைத்துக் கொடுப்பது, அவர்களின் திறமைகளை வெளி உலகுக்கு கொண்டு வருவதற்கான செயற்பாட்டை மேற்கொள்வதற்கான குழுவாகவே காணப்பட வேண்டும்.

ஆனால் தன்னிச்சையான செயல்பாடுகள், தான் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு விளையாட்டு வீரர்களின் மனநிலையைப் பாதிப்படையச் செய்கின்ற செயல்பாடாக தற்போது மடு மாந்தை லீக்கில் இடம்பெற்று வருவதாக எண்ணத் தோன்றுகின்றது.

மடு மாந்தை லீக்கின் முந்தைய தலைவர் தன்னிச்சையாக தான் சார்ந்த ஒரு சில குறிப்பாக அவரின் ஊரில் உள்ள இரண்டு கழகமும், அருகில் உள்ள கத்தாளம் பட்டி கிராமத்தில் இருந்து ஒரு கழகம் உள்ளடங்களாக 3 கழகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய 14 கழகங்களில் உள்ள விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கிக் கொண்டு இருக்கின்றனர்” என்று கூறினர்.



## டொட்டென்ஹாமுக்கு மீளத் திரும்பும் பொச்செட்டினோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸின் முன்னாள் முகாமையாளரானமௌரிசியோ பொச்செட்டினோ கழகத்துக்கு மீளத் திரும்புவது குறித்து அவருடன் கழக வீரர்கள் தொடர்புடனிருப்பதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும், தற்போதைய நிலையில் டொட்டென்ஹாமுக்குத் திரும்ப பொச்செட்டினோ தயாரில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



### விழிப்புலனற்றோர் ஒலிப்பந்து கிரிக்கெட்போட்டியில்

# வென்ற இரத்மலான பார்வைற்றோர் கிரிக்கெட் அணி

அஸ்ஹர் இப்ராஹிம்

விழிப்புலனற்றோர் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு கிழக்கு மாகாண பிறில்லியன்ட் பார்வையற்றோர் கிரிக்கெட் அணியுடனான போட்டியில் கொழும்பு இரத்மலான பார்வைற்றோர் கிரிக்கெட் அணி வென்றது.

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இரத்மலான விழிப்புணர்வற்றோர் கிரிக்கெட் அணி, கிழக்கு மாகாண விழிப்புணர்வற்றோர் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிழக்கு மாகாண அணி 15 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 95 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இரத்மலான அணி 14.2 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக இரத்மலான அணித் தலைவர் திமுத்த பெரேரா தெரிவானார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 மார்ச் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.